2019 ஜூலை 12]

(ஈ) திருவெறும்பூர் தொகுதி, அரியமங்கலம் குப்பைக் கிடங்கில் அடிக்கடி ஏற்படும் தீ விபத்துகள் மற்றும் சுகாதார சீர்கேடுகளைத் தடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள்.*

திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய திருவெறும்பூர் தொகுதியில் இருக்கின்ற மாநகராட்சி வார்டு 29, அரியமங்கலம் பகுதியில் கிட்டத்தட்ட 70 ஆண்டுகளாக ஒரு குப்பைமேடு இருக்கிறது. ஏறத்தாழ ஏழு இலட்சம் டன்னிற்கு மேல் அந்தக் குப்பைகள் தற்போது இருந்தாலும், ஒரு நாளைக்கு மாநகராட்சிமூலம் மொத்தமுள்ள 65 வார்டுகளிலும் சேகரிக்கப்படும் அனைத்து குப்பைகளும் ஏறத்தாழ 450 டன்னுக்குமேல் அங்குதான் கொட்டப்படுகிறது. இன்றைக்கு* zonal wise *ஆக அந்த* process unit*–ஐ பிரித்து வைத்திருந்தாலும், 350 டன்னாவது கொட்டக்கூடிய நிலைமைதான் அங்கே இருந்து கொண்டிருக்கிறது. தீ பிடிக்கும் நிகழ்வு வருடா வருடம் ஏற்படுகிறது. இன்றோடு சேர்த்து எங்கள் பகுதியில் ஐந்தாவது நாட்களாக அந்தக் குப்பை மேட்டில் தீ பிடித்து எரிந்துகொண்டிருக்கிறது. நான் காலையில் கார்ப்பரேஷன் கமிஷனர் அவர்களிடம் பேசிவிட்டு வருவேன். 'இன்றைக்கு ஓரளவிற்கு அணைந்திருக்கிறது' என்று சொல்வார்கள். ஆனால், மாலையில் பார்த்தீர்கள் என்றால், திரும்பவும் தீ பிடிக்கின்ற நிகழ்வு ஏற்படுகிறது. காற்று வீசும் காலம் என்பதால் தீயை அணைப்பது மிகவும் சிரமமாக இருக்கிறது. நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடமும் இதுகுறித்து காண்பித்தேன். இது காற்று வீசும் காலமாக இருப்பதால், இந்தப் பகுதியைச் சுற்றி இருக்கின்ற அம்பிகா நகர், இரயில் நகர், ராஜப்பன் நகர், காட்டூர் பகுதிகளில் 5* km radius*–க்கு புகை சுற்றி வந்துகொண்டிருக்கிறது. ஏன் சொல்கிறேன் என்றால், மீத்தேன் வாயுவினாலும், ஏற்கெனவே இருக்கின்ற வெப்பத்தின் காரணமாகவும்தான் தீ ஏற்படுகிறது. வருடா வருடம் 3, 4 முறைகள் நெருப்பு பிடிக்கிறது என்று சொன்னாலும், சில நேரங்களில் உடனடியாக அணைத்து விடுகிறோம். சில நேரங்களில் 4, 5 நாட்கள் ஆகும்போதுதான், அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்களுக்கு கண் எரிச்சல்,* breathing distress *போன்ற பிரச்சினைகள் அதிகளவில் ஏற்படுகின்றன. ஆகவே, இதை உடனடியாக இந்த அரசாங்கம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். இதைச் சொல்வதற்குக் காரணம், அந்தப் பகுதியைச் சுற்றியுள்ள பள்ளிகள்,*

[திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி] [2019 ஜுலை 12

வணிக நிறுவனங்கள், மருத்துவமனைகளையெல்லாம் நான்கு நாட்களாக மூடியே வைத்திருக்கிறார்கள். வீட்டில் வசிக்கின்ற மக்களும் அந்த இடத்தை காலிசெய்து வேறு ஊர்களுக்குச் செல்கின்ற நிலை அங்கு ஏற்பட்டிருக்கிறது. ஆக, எந்த சுகாதாரக் கேடுகளும் இல்லாத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்போதுகூட medical camp உடனடியாகத் தேவையென்று மக்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். கண்டிப்பாக தேவைதான் இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், prevention is better than cure. கமிஷனர் அவர்கள், Biomining செய்கிறோம், இனிமேல் இதுபோன்று வராது என்று சொல்கிறார்கள். Biomining செய்யுங்கள், நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், அதை அங்கு செய்யாதீர்கள். ஏனென்றால், அது மாநகராட்சிக்குட்பட்ட பகுதியாக இருக்கிறது. ஒருகாலத்தில் வெளிப்புற பகுதியாக இருந்திருக்கலாம். ஆனால், இன்றைக்கு அது மாநகராட்சிக்குட்பட்ட பகுதியாக இருப்பதால், biomining திட்டத்தை outskirt–க்கு கொண்டு செல்லுங்கள். கொஞ்சம் கொஞ்சமாகக் குப்பை மேடுகளை அங்கு shift செய்யுங்கள். அதுவரைக்கும் இந்த biomining நடந்துகொண்டிருக்கட்டும். முழுவதுமாக குப்பை மேட்டை shift செய்த பிறகு இதைச் செய்யுங்கள். அப்போதுதான் இது சரியாக வரும். எனவே, எந்த ஒரு சுகாதார சீர்கேடும் இல்லாமல் மக்கள் நல்ல வாழ்வை வாழ்வதற்கு, நல்ல காற்றை சுவாசிப்பதற்கு, நல்ல தண்ணீர் பெறுவதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று வலியுறுத்தும் வகையில் அரசின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டுவந்த பிரச்சினை ஒரு முக்கியமான பிரச்சினை. அரசுக்கும், உள்ளாட்சித் துறைக்கும், திடக் கழிவு மேலாண்மை என்பது மிகப் பெரிய சவாலான பிரச்சினை. தமிழகத்திலே சேகரிக்கப்படும் குப்பைகளின் அளவு சென்னை மாநகரத்திலே தினமும் 5,400 டன்னும், பிற மாநகராட்சி, நகராட்சிப் பகுதிகளில் கிட்டத்தட்ட 7,000 டன்னாகவும் இருந்தது. திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தின்மூலம் குப்பைகளைப் பிரிப்பதனால் இந்த அளவு 6,394 டன்னாக குறைக்கப்பட்டிருக்கிறது. பேரூராட்சிகளில் கிட்டத்தட்ட இரண்டாயிரம் டன்னாகவும்,

2019 ஜூலை 12] [திரு. எஸ்.பி. வேலுமணி]

ஊராட்சிகளில் 4,532 டன்னாகவும், ஆகமொத்தம் தினமும் தமிழ்நாட்டில் சேருகின்ற குப்பைகளின் அளவு கிட்டத்தட்ட 18,498 டன்னாக இருக்கிறது. மீத்தேன் வாயுவினால் அடிக்கடி தீ பிடிக்கக்கூடிய சூழ்நிலை அங்கு ஏற்பட்டிருக்கிறது. சில சமூக விரோதிகள், தினமும் பணம் கிடைக்க வேண்டும் என்பதற்காக, அந்தக் குப்பை கிடங்கிலிருக்கும் குப்பைகளிலிருந்து கம்பிகளை எடுப்பதுபோல் அந்தப் பகுதிகளுக்குள்ளே சென்று விடுகிறார்கள். அரியமங்கலத்தில் 5 டவர் கேமராக்கள் பொருத்தப்பட்டு, இன்றைக்கு பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சமீபத்தில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய வெள்ளலூர் குப்பைக் கிடங்கில்கூட இதுபோன்று தீ விபத்து ஏற்பட்டபோது, 5 ஹெலிகாப்டர்கள்மூலம் தீயை அணைக்கக்கூடிய சூழ்நிலை வந்தது. எல்லா பகுதிகளிலும் இந்த மாதிரி சூழ்நிலை இருந்தாலும்கூட, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இதில் தனிக் கவனம் செலுத்தி, திடக் கழிவைக் கையாளுவதற்குப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இருந்தாலும்கூட, இது ஒரு பெரிய சவாலான பிரச்சினையாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–40

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் மொத்த மக்கள் தொகை 9 இலட்சத்து 16 ஆயிரத்து 857, 69 வார்டுகள் இருக்கின்றன. இம்மாநகராட்சியில் நபர் ஒன்றுக்கு 450 கிராம் வீதம் தினசரி உற்பத்தியாகும் கழிவுகள் 420 மெட்ரிக் டன். 'தூய்மை இந்தியா' திட்டத்தின்கீழ் 26.82 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நுண் உரக் கிடங்குகள் சுமார் 29 இடங்களில் அமைக்கப்பட்டு, உரம் தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் 125 எண்ணிக்கை இலகு ரக வாகனங்கள் வாங்கப்பட்டு, வீடுதோறும் குப்பைகள் பிரித்து வாங்கப்படும் பணிக்குப் பயன்படுத்தப்படுகின்றன. 2 எண்ணிக்கை chain poclain *வாகனங்கள் வாங்கப்பட்டு, திடக் கழிவு மேலாண்மைப் பணிக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.*

மாநகராட்சியின் பொது விதியின்கீழ் 4.07 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5 இடங்களில் உரக் கிடங்குகள் அமைக்க திட்டமிடப்பட்டு, தற்போது பணிகள் முடிக்கப்பட்டு, உரம் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், மறு சுழற்சி செய்ய இயலாத கழிவுகள் M/S. Dalmia Cements *மற்றும்* M/S. Ultratech Cements *ஆலைகளுக்கு மாற்று எரிபொருளாகப் பயன்படுத்துவதற்கு*

வழங்கப்படுகிறது. மாண்புமிகு தமிழக முன்னாள் முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குத் திட்டம் 2023–ன்படி திடக் கழிவு மேலாண்மைக்காக நுண் உரக் கிடங்குகள் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது திருச்சி மாநகராட்சியில், அந்தந்த வார்டு பகுதிகளில் 31 இடங்களில் Micro Compost Centre அமைக்கப்படுவது குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நுண்ணுயிர் செயலாக்க மையங்கள்மூலம் தினமும் சுமார் 250 மெட்ரிக் டன் குப்பைகள் கையாளப்படுகிறது. மீதமுள்ள 200 மெட்ரிக் டன் குப்பைகளை கையாள்வதற்கு Micro Compost Centre நுண்ணுயிர் செயலாக்க மையங்கள் அமைக்கப்பட உள்ளன. மேலும், 75 வருடங்களாக அரியமங்கலம் குப்பைக் கிடங்கு பகுதிகளில் தேங்கியுள்ள 7 இலட்சம் கன மீட்டர் குப்பைகளை அகற்றுவதற்கு சீர்மிகு நகரம் smart city திட்டத்தின்கீழ் 49 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, உயிரி அகழாய்வு முறையில் அகற்றப்படவுள்ளது. இந்தப் பணி தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2½ வருட காலத்திற்குள் அங்குள்ள குப்பைகள் முழுவதும் அகற்றப்பட்டு, 45 ஏக்கர் நிலம் மீட்கப்படும்.

அதேபோல், இந்த குப்பைக் கிடங்கில் தீ பிடிக்கக்கூடிய நிலையைத் தடுப்பதற்கு, இன்றைக்கு அரியமங்கலம் கலப்பு உரக் கிடங்கில் சுற்றுச் சுவர் மற்றும் gate வசதி, 40 ஆயிரம் மீட்டர் கொள்ளளவுள்ள நீர்த்தேக்கத் தொட்டி, வாகனங்கள் வந்து செல்வதற்கு ஏதுவாக சிமென்ட், கான்கிரீட் சாலைகள் போன்றவை அமைக்கப்பட்டுள்ளன. தீவிபத்து ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தண்ணீர் லாரிகள்மூலம் குப்பைகளின் மேற்பரப்பில் தண்ணீர் தெளிக்கும் பணி தினமும் நடைபெற்று வருகிறது. திடீரென தீ பிடிக்கும் காலங்களில் தீயினை விரைவாக அணைக்கும் வகையில் குப்பைக் கிடங்குகளில் ஆங்காங்கே 19 இடங்களில் சிறிய வகை தண்ணீர் தெளிப்பான்கள் பொருத்தப்பட்டுள்ளன. 3 எண்ணிக்கை தண்ணீர் லாரிகள் உரக் கிடங்கு வளாகத்திலேயே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. மேலும், உரக் கிடங்கின் உட்புறத்தில் ஆட்கள் நடமாட்டத்தைக் கண்காணிக்க 5 எண்ணிக்கை கண்காணிப்புக் கோபுரம் பொருத்தப்பட்டு, தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு, தீ விபத்து ஏற்படுவது தடுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இக்குப்பைக் கிடங்குகளில் தீ பிடித்து சுற்றுச்சூழல்

2019 ஜூலை 12] [திரு. எஸ்.பி. வேலுமணி]

பாதிக்கும் நிலை முற்றிலுமாக தவிர்க்கப்படும் என்பதையும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பல்வேறு கருத்துகளையும் உள்வாங்கி, அதிகாரிகளோடு கலந்துபேசி கண்டிப்பாக, தீவிரமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. விதி 110—ன்கீழ் அறிக்கைகள்

(அ) 'யாதும் ஊரே' தனி சிறப்புப் பிரிவு உருவாக்குதல், புதுதில்லி தமிழ்நாடு இல்லத்தில் 'தொழில் வளர் தமிழகம்' பிரிவை தொடங்குதல், 'தொழில் தோழன்' குறைதீர் வழிமுறை ஏற்படுத்துதல், திருப்பெரும்புதூர் வான்வெளி மற்றும் பாதுகாப்பு பூங்காவில் தொழில் முனைவோருக்கான சிறப்பு மையம் நிறுவுதல் உள்ளிட்ட தொழில் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110—ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள், அனுமதியளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

1. உலகெங்கும் உள்ள தமிழ் மக்கள், தமிழ் சங்கங்கள், தொழில் அமைப்புகளுடன் தொடர்பு ஏற்படுத்தி, 'முதலீட்டு தூதுவர்களை' உருவாக்கி, தமிழ்நாட்டில் முதலீடு செய்வது தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தவும், அவர்தம் ஆலோசனைகளைப் பெறவும், முதலீடுகளை ஈர்க்கவும் 'யாதும் ஊரே' என்ற தனி சிறப்புப் பிரிவு மற்றும் வலைதளம் 60 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. தமிழ்நாட்டில் முதலீடு செய்ய முன்வரும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு உரிய வழிகாட்டுதல்களை வழங்கிடவும், தொழில் துவங்க முன்வரும் முதலீட்டாளர்களை, வல்லுநர்களைக் கொண்டு அடையாளம் காணவும், ஜப்பான், தென் கொரியா, அமெரிக்கா, சீனா, தைவான், பிரான்சு, இஸ்ரேல் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கென தனித்தனியாக சிறப்பு அமைவுகள் அமைக்கப்படும். மேலும், தலைநகர் புதுதில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் புதிய பிரிவு ஒன்று